பதிவஞ்சலில்

ந.க.எண்.3847/நி2/2020

இணை இயக்குனர் நலப்பணிகள் அலுவலகம்,
மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகம்
காஞ்சிபுரம் - 631 501.
நாள் 5.08.2021.

பொருள் நிர்வாகம்- திரு.தி.அன்பரசு, (த/பெ(அமரர்) திரு.திருசங்கு, சமையலர், அரசு தலைமை மருத்துவமனை, காஞ்சிபுரம்) - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணி நியமனம் - பணிவரன்முறை ஆணை அனுப்புவது - தொடர்பாக.

பார்வை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-6 அவர்களின் பணி நியமன ஆணை ந.க.எண்.000206/நிபி8/1/2021 நாள்.24.06.2021.

''''''''''''''''''''''

பார்வையில் காணும் கடிதத்தின்படி கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு திருப்போரூர், அரசு மருத்துவமனையில் பணிபுரியும் திரு.தி.அன்பரசு அவர் பணியில் இணைந்த நாளான 10.01.2020 முப பணிவரன்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணிவரன்முறை ஆணை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றன.

இணைப்பு - மேலே உள்ளவாறு.

இணை இயக்குநர் நலப்பணிகள்,
காஞ்சிபுரம்.

பெறுநர்
முதன்மை மருத்துவ அலுவலர்,
அரசு மருத்துவமனை,
திருப்போரூர். (பணிபதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறவுறுத்தப்படுகிறது.)

உ.பரி - 1

<u>பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்</u>

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், சென்னை–6 அவர்களின்
செயல்முறை ஆணை

**முன்னிலை: மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),**

<u>ந.க.எண். 000206/நிபி8/1/2021</u>

நாள்: 24.06.2021

பொருள்: நிர்வாகம் - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.தி.அன்பரசு, (த/பெ. திரு.திருசங்கு, சமையலர், அரசு தலைமை மருத்துவமனை, காஞ்சிபுரம்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை – ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 03.08.1977.
2) அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.06.1995.
3) அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 12.03.2007.
4) அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 08.10.2007.
5) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.02.2021.
6) அரசு கடித எண்.8755/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் : 16.03.2021.
7) இவ்வியக்கக பணிநியமன ஆணை எண்.74825/நிபி8/1/2019, நாள் 26.12.2019.
8) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை எண்.81280/நி2/2/2019, நாள் 02.01.2020.
9) காஞ்சிபுரம் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக கடித ந.க.எண்.3847/நி2/2020, நாள் 30.12.2020.

*****

**<u>ஆணை:</u>**

காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சமையலராராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே காலமான திரு.திருசங்கு என்பவர் 09.05.1972 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 07.05.1974 தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அன்னாரின் பிறந்த தேதி 15.04.1948, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.04.2008 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.தி.அன்பரசு என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

(2......

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சமையலராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 10.03.2006 அன்று இயற்கையெய்திய திரு.திருசங்கு மகனும் வாரிசுதாரருமாகிய திரு.தி.அன்பரசு (பிறந்த தேதி 05.05.1979) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணையடிப்படையில் தற்காலிக உதவியாளராக ரூ.19500-62000/- நிலை 8 (Level 8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், அரசு மருத்துவமனையில் 10.01.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.தி.அன்பரசு என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-5இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 10.01.2020 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ்.குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திரு.தி.அன்பரசு, இளநிலை உதவியாளர்
அரசு மருத்துவமனை, திருப்போரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.
-- இணை இயக்குநர் நலப்பணிகள், காஞ்சிபுரம் மூலமாக

நகல்
இணை இயக்குநர் நலப்பணிகள், காஞ்சிபுரம்.
நிர்வாகப் பிரிவு 2 (2 நகல்கள்)
நிர்வாகப் பிரிவு 2 (முதுநிலை)
இருப்புக் கோப்பு / உதிரி

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

25/6/21

ந.க.எண். 3647/கி2/2020

இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்
காஞ்சிபுரம் நாள் 5.8.2021

- அனுப்பப்படுகிறது -

பெறுநர்